1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலங்களை வீசுக்கோ மற்றவற்றுக்கோ கொடுப்பதற்கு வருவாய்த்துறைதான் பொறுப்பு ஏற்க வேண்டு மென்று கருதுகிறேன். கிராமப்புற மக்களின் கோரிக்கையை ஏற்றுத்தான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். நகர்ப்புற மக்களும் கோரிக்கை கொடுத்தால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே கூட, விஞ்ஞானம் வெகுவாக வளர்ந்திருக்கிற இந்த காலக் கட்டத்திலே கூட மிகப் பெரிய உயர் அதிகாரிகளாக இருந்தாலும்கூட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நகர்ப்புறத்திலே வீடு கிடைப்பது என்பது மிகவும் பிரச்சினையாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையிலே அவர்கள் திருமண மண்டபங்களைப் பெற முடிவதில்லை. எனவே தாழ்த்தப்பட்ட மக்களின் உற்ற தோழராக இருந்துகொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியிலே, வட்ட அளவிலாவது, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி அளவிலேயே பரிசீலிப்பதற்கு ாத்தியக்கூறு இல்லை. வட்ட அளவில் என்று சொன்னால் செலவு அதிகமாகும். நிதிநிலைமை மிக மோசமான நிலையிலே இருக்கிறது. கோரிக்கைகள் வருகின்ற பகுதிகளுக்கு, அவற்றைப் பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 237. திரு. கே. செல்வராஜ். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

237—

பால் விநியோக மையங்களில் பெண்களை நியமித்தல்.

*5025—

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தமிழ்நாடு முழுவதும் பால் விநியோக மையங்களில் பணியாளர்களாகப் பெண்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செயற்குறிப்பு கேட்கப்பட்டுள்ளது.

(ஆ) இதனை ஆராய்ந்து, சாத்தியக்கூறுகள் இருப்பின் செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் எடுக்கப்படும்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள பால் விநியோக மையங் களில் குறிப்பாக பெண்களே பால் வாங்க வருவதால், ஆண்கள் பணியாற்றுகின்ற அந்த மையங்களில், அந்தப் பணியிடங்களுக்கு படித்து வேலையில்லாத பெண்கள், விதவைப் பெண்கள், ஆதரவற்றப் பெண்களுக்கு வேலைவாய்ப்பினை கொடுக்கின்ற விதத்தில் 30 சதவீத பெண்களுக்கு அரசு வேலை வாய்ப்பு கொடுக்கும் என்கின்ற குறிப்பு இருக்கின்ற காரணத்தினால், 30 சதவீத அளவிலாவது பெண்களை அந்த வேலை வாய்ப்பில் அமர்த் துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை நகரம் மற்றும் புறநகர்ப் பகுதி களில் இதுபோன்று விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்திருக் கிறது. ஆனால் பெண்கள் இந்த வேலையைச் செய்வதில் எந்த அளவிற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்பதை ஆராய்ந்து வரு கிறோம். அதிகாலையிலே 3.00 மணியளவில் பெண்கள் தனியாக வந்து விற்பனை செய்வதற்கு இயலுமா என்பதை ஆராய்ந்து, சாத்தியக்கூறு எந்த அளவிற்கு சாதகமாக இருக்கும் என்பதைப் பார்த்து இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரில் தனியார் நிறுவனங்களில் இரவு நேரங்களில் பெண்கள் பணியாற்றச் சென்றால் பாது காப்பு கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அரசுத் துறையான பால்வள நிறுவனத்தில் பணியாற்ற பெண்களுக்கு பாதுகாப்பு கொடுத்து, அந்தப் பணியில் அவர்களை அமர்த்துவீர் களா ? இந்த ஆண்டே இதைச் செயல்படுத்துவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை பரிசீலிக்கலாம்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறைக்கே நாம் பெண்களை எடுக்கின்ற இந்தக் கால கட்டத்தில், இப்பொழுது பால் பாக்கெட்டுகளையெல்லாம் அதிகமான விலைக்கு விற்று ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற சில ஏஜண்டுகளையெல்லாம் கேன்சல் செய்து விட்டு, உடனடியாகப் பெண்களை அந்த இடத்தில் நியமிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்தால் கேன்சல் செய்துகொண்டு தான் இருக்கிறோம். அப்படிப்பட்ட இடங்களில் முன்னாள் படை வீரர்களுக்கு முன்னுரிமை அளித்துக் கொண்டிருக்கிறோம். பெண்களுக்கு எந்த அளவிற்குப் பாதுகாப்பு தந்து, அதைப்பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, எந்த அளவிற்குச் செய்ய முடியும் என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 238. திரு. செ. பெருமாள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

238— கருமந்துரையில் தொழில் மையம்.

*3982 திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) ஏற்காடு தொகுதியில் கல்வராயன் மலையில் கருமந்துரையை மையமாகக் கொண்டு அரசு தொழில் மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. என். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.